டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 3.8.2023 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 40 - Madurai | Online Edition

# தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மறுசீரமைக்கப்பு பயிற்சி

புது தில்லி, ஆக.2

கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை, பிப்ரவரி 2014 முதல் நாடு முழுவதும் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தை 2021-22 முதல் 2025-26 வரை பின்வரும் இரண்டு கூறுகளுடன் செயல்படுத்துவதற் காக ஜூலை 2021இல் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

(i) மாநில கூட்டுறவு பால் கூட்டமைப்புகள் / மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் / சுய உதவிக் குழுக்கள் / பால் உற்பத்தி நிறுவனங்கள் / உழவர் உற்பத்தி அமைப்புகளுக்கான தரமான பால் பரிசோதனை உபகரணங்கள் மற்றும் முதன்மை குளிரூட்டும் வசதிகளுக்கான உள்கட்டமைப்பை உருவாக்குதல் / வலுப்படுத்துவதில் தேசிய பால்வள மேம்பாட்டுத் துறையின் 'ஏ' கூறு கவனம் செலுத்துகிறது.

(ii) "கூட்டுறவுகள் மூலம் பால்வளம்" என்ற தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கூறு 'பி', பால் மற்றும் பால் பொருட் களின் விற்பனையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது. இது ஒழுங்கமைக்கப்பட்ட சந்தைக்கான விவசாயி களின் அணுகலை அதிகரிப்பதன் மூலமும், பால் பதப்படுத்தும் வசதிகள் மற்றும் சந்தைப்படுத்தல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமும், உற்பத்தியாளருக்குச் சொந்தமான நிறுவனங்களின் திறனை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் மாநில வாரியான ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப் படவில்லை. இந்நிலையில் தமிழ்நாட்டிற்கு வழங்குவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட 236.80 கோடி ரூபாயில் மத்திய அரசின் பங்கு ரூ.167.88 கோடியாகும்.

கடந்த மூன்றாண்டுகளில் மாநிலத்திற்கு ரூ.70.83 கோடி விடுவிக்கப்பட்டு, அதில் ரூ.66.92 கோடி பயன்படுத்தப்பட்டு உள்ளது. இதேபோல புதுச்சேரிக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் விடுவிக்கப்பட்ட 0.39 கோடி ரூபாய் முழுவதும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கூறு பி–யின் கீழ், சுத்தமான பால் உற்பத்தி மற்றும் நல்ல சுகாதார நடைமுறைகள், கறவை மாடுகள் வளர்ப்பு, கால்நடை தீவனம், பசுந்தீவனம் மற்றும் தாதுக் கலவை போன்றவை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மறுசீரமைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் பயிற்சி நடவடிக்கைகளுக்கு மாநில வாரியாக அங்கீகரிக் கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கையின் படி (25.7.23 நிலவரப்படி) தமிழ்நாட்டில் 75,677 விவசாயிகளும் புதுச்சேரியில் 1,000 விவசாயிகளும் உள்ளனர்.

இத்தகவலை மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்சோத்தம் ரூபாலா தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## சேலம் பூ மார்க்கெட் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் வாங்கும் விலை நிலவரம் (விலை கிலோ 1க்கு)

| | | | |
|---|---|---|---|
| மல்லி | 500 | மஞ்சள் அரளி | 190 |
| முல்லை | 360 | செவ்வரளி | 220 |
| ஜாதி மல்லி | 320 | ஐ.செவ்வரளி | 200 |
| காக்கட்டான் | 240 | நந்தியாவட்டம் | 40 |
| கலர் காக்கட்டான் | 160 | சி.நந்தியாவட்டம் | 80 |
| மலைக்காக்கட்டான் | 240 | சம்மங்கி | 200 |
| அரளி | 180 | சாதா சம்பங்கி | 200 |
| வெள்ளை அரளி | 190 | | |

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பண்ணை வருமானத்தை பெருக்க ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் மற்றும் வேளாண் காடுகளுடன் கால்நடைகள் ஒருங்கிணைப்பு பயிற்சி

கள்ளக்குறிச்சி, ஆக.2

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள காளசமுத்திரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் (KVK Kallakurichi) வருகின்ற ஆகஸ்ட் மாதம் 10.8.23 வியாழக்கிழமை அன்று பண்ணை வருமானத்தை பெருக்க ஒருங்கிணைந்த பண்ணையம் முறைகள் மற்றும் வேளாண் காடுகளுடன் கால்நடைகள் ஒருங்கிணைப்பு என்ற தலைப்பில் இலவச பயிற்சி நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத் துவம், அடிப்படை தத்துவங்கள், பல்வேறு மண் மற்றும் சூழ்நிலைகளுக்கேற்ற ஒருங்கிணைந்த பண்ணை மாதிரிகள், கால்நடை மற்றும் கோழியினங்களை ஒருங்கிணைந்தல், மண் புழு உரம் உற்பத்தி, பண்ணைக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், வருமானம் தரக்கூடிய உபதொழில்களை ஒருங் கிணைத்தல், அசோலா உற்பத்தி முறைகள், ஆடு, மாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு முறைகள், மீன் வளர்ப்புடன் கோழி வளர்த்தல், வேளாண் காடுகள் அமைத்தல், கால்நடை களுக்கேற்ற பசுந்தீவன உற்பத்தி முறைகள், மதிப்பூட்டபட்ட பொருட்கள் தயாரித்தல் பற்றிய தொழில்நுட்பங்கள் விரிவாக எடுத்துரைக்கப்படும். ஆகையால் விருப்பம் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டு கொள்கிறோம்.

முன் பதிவுற்கு தொலைபேசி 83009 78770 எண்னை தொடர்பு கொள்ளவும். பயிற்சிக்கு வரும் போது ஆதார் அட்டை நகல் கொண்டு வரவும்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

SATHYAM Agro Clinic

சத்யம் அக்ரோ கிளினிக் – விதை முதல் விற்பனை வரை

வேளாண் மருத்துவ மையம்

# சத்யம் விவசாயிகள் கிளப்
# SATHYAM FARMERS CLUB
## விதை முதல் விற்பனை வரை

விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்




### சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்

- பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
- விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
- காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
- உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
- விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
- விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
- விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.

SATHYAM GROUP OF COMPANIES

Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.

Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.

Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.

**For More Details Contact us: +91 75508 75508**

Mail us : sales@sathyamagroclinic.com

www.sathyamagroclinic.com

# மாடுகள் நோயற்று ஆரோக்கியமாக இருப்பதற்கான பண்ணை பராமரிப்பு முறைகள்

மாட்டுப் பண்ணையானது நல்ல இலாபகரமானதாக இருப்பதற்கு மாடுகள் நல்ல உற்பத்தித் திறனுடையதாகவும், ஆரோக்கியமானதாகவும், பண்ணையில் மருத்துவச்செலவு குறைந்தும் இருக்க வேண்டும். கறவை மாடுகள் நல்ல பால் உற்பத்தித் திறனைக் கொண்டிருந்தாலும் மாடுகளுக்கு நச்சுயிர், நுண்ணுயிர் மற்றும் ஒட்டுண்ணிகள் மூலமாக நோய் உண்டாகும் பொழுது மாடுகளின் உடல் நலம் பாதிக்கப்பட்டு பால் உற்பத்தி குறைவதோடல்லாமல் பல சமயங்களில் மாடுகள் உயிரிழக்கும் பொழுது பெருத்த பொருளாதார இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மாடுகளை நோய் தாக்காமல் இருக்க மாடுகளை வளர்ப்போர் சிறந்த பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் மாடுகளின் உடல் நலத்தை சிறந்த முறையில் காக்க முடியும்.

நோய் எதிர்ப்புத் திறன் அதிகமுள்ள மாடுகள் மற்றும் கன்றுகள் தொற்று நோய்களால் பாதிக்கப்படுவதில்லை. மாடுகளிலும் கன்றுகளிலும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி உரிய காலத்தில், தக்க நோய்த் தடுப்பூசிகளைத் தவறாமல் போட வேண்டும். மாடுகளை வெகுவாகப் பாதிக்கும் பல நச்சுயிர் மற்றும் நுண்ணுயிரி மூலம் பரவும் நோய்களுக்குத் தடுப்பூசிகள் உள்ளன. தடுப்பூசி போடும் பொழுது பண்ணையிலுள்ள அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும். மாடுகளை வைத்திருப்போர் கறவையிலுள்ள மாடுகளில் பால் குறையும் என்பதற்காகவும், சினை மாடுகளில் கன்று விசிறி விடும் என்பதற்காகவும் தடுப்பூசிகளை போடுவதைத் தடுப்பர். இது தவறானதாகும். தடுப்பூசி என்பது நோய்கள் வராமல் தடுப்பதற்காக என்பதை மனத்தில் கொண்டு கால்நடை மருத்துவர் உதவியுடன் தடுப்பூசிகளை போட்டுக் கொள்ள வேண்டும். கன்றுகளுக்கு சீம்பால் கொடுக்க வேண்டும். இதனால், இளங்கன்றுகளுக்கு நோய் எதிர்ப்புத் திறன் கிடைக்கிறது.

தரமான நச்சுத் தன்மையற்ற தீவனம், போதுமான இடவசதியுடன் கூடிய சுகாதாரமான கொட்டகை, மோசமான தட்பவெப்ப நிலைகளிலிருந்து பாதுகாப்பு போன்றவற்றை அளிக்க வேண்டும்.

தீவனம் மற்றும் தண்ணீர்த் தொட்டியைத் தினமும் சுத்தம் செய்ய வேண்டும். மாதம் ஒரு முறையாவது தண்ணீர் தொட்டிக்கு சுண்ணாம்பு அடிக்க வேண்டும். பாசி பிடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர்த் தொட்டியை மூடி வைக்க வேண்டும். சாணத்தை 300 அடிக்கு அப்பால் எடுத்துச் சென்று உரக்குழியில் கொட்டுதல் அவசியம்.

நோய்க்கிருமிகள் மற்ற பண்ணைகளிலிருந்தும் உயிருள்ள அல்லது உயிரற்ற பொருட்கள் மூலம் நம் பண்ணையில் இருக்கும் மாடுகளுக்கு வர வாய்ப்பிருக்கிறது. நோயுற்ற பசுக் களை வாங்கி பண்ணைக்குள் விடுவது, எலி, பூனை போன்ற விலங்கினங்கள் பண்ணைக்குள் புகுதல் போன்ற காரணங் களால் நோய்க் கிருமிகள் நல்ல ஆரோக்கியமான மாடு களுக்குப் பரவ வாய்ப்புள்ளது.

புதிதாக மாடுகளை வாங்கும் போது கால்நடை மருத்துவர் கொண்டு பரிசோதனை செய்து வாங்குவது நல்லது. புதிதாக வாங்கிய மாடுகளைக் குறைந்தது 15 நாட்களுக்குத் தனியாக வைத்துப் பராமரித்து நோய் இல்லையென முடிவு செய்த பின்பு மற்ற மாடுகளோடு சேர்த்து வளர்க்கலாம். எலி மற்றும் பூனைகள் பண்ணைக்குள் நுழையாமல் இருக்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்.



பண்ணையில் பயன்படுத்தப்படும் உயிரற்ற பொருட்கள், உதாரணமாக வாகனங்கள், தீவன மூட்டை, வாளி போன்ற பொருட்கள் மூலமாகக் கிருமிகள் பண்ணைக்குள் வர வாய்ப்புகள் உள்ளன. அதனால் மாடுகளை நோய்க்கிருமிகள் தாக்காமல் இருக்க பண்ணையின் பொதுச் சுகாதாரம் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும். பீனால், லைசால், பொட்டாசியம் பெர்மாங்கனேட், பார்மலின், சுண்ணாம்புத் தூள், ப்ளீச்சிங் பவுடர், சேவ்லான் போன்ற கிருமி நாசினி மருந்துகளில் ஏதாவது ஒன்றைக் கொண்டு தினமும் தொழுவத்தையும், சுற்றுப் புறத்தையும் சுத்தம் செய்தால் நோய்க்கிருமிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறையும். கிருமி நாசினி மருந்தின் முழுப் பயனையும் பெற வேண்டுமெனில் கிருமி நாசினி மருந்தைப் பயன்படுத்துவதற்கு முன்பு தரை, மாடு நிற்கும் இடம் போன்றவற்றை நன்கு கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.

பண்ணைக்குள் நுழையும் வாயிலில் கிருமி நாசினி மருந்து கலந்த தண்ணீரில் பண்ணைக்குள் நுழையும் அனைவரும் பாதங்களை நனைத்துப் பின் உள்ளே அனுமதிக்கப்பட வேண்டும். வாகனங்களைப் பண்ணைக்கு வெளியே நிறுத்தி விடுவது நல்லது. இவ்வாறு செய்வதால் நோய்க்கிருமிகள் பண்ணைக்குள் வருவதைத் தடுக்கலாம். பால் கறக்கும் போது பால் தரையில் சிந்தக் கூடாது. அவ்வாறு சிந்த நேர்ந்தால் உடனே கழுவி விட வேண்டும். இல்லையேல் ஈ மொய்த்து நோய் பரவ வாய்ப்புண்டு. அதே போல் பால் கறக்கும் போது மடியை சுத்தமான தண்ணீர் கொண்டு நன்கு கழுவி விட்டு பிறகு கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்வது நல்லது. பால் கறக்கும் நபர் கைகளைக் கிருமி நாசினியால் நன்கு சுத்தம் செய்த பிறகே பால் கறக்க வேண்டும். பால் கறக்கும் இயந்திரம் பயன்படுத்தும் போது கறவை முடிந்தவுடன் பால் இயந்திரத்தின் இரப்பர் பாகம் அனைத்தையும் நன்கு கழுவி சுத்தம் செய்ய வேண்டும். பால் காம்பைக் கறக்கும் முன்பும் கறந்த பின்பும் 0.5 சதவிகிதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கிருமி நாசினி கலவை கொண்டு கழுவ வேண்டும். முடிந்தவரை பண்ணையில் உள்ள மாடுகள் வெளியில் சென்று மேய்வதையும், மற்ற மாடுகளோடு கலப்பதையும் அறவே தவிர்க்க வேண்டும். அதே போல் வெளி மாடுகளையும் பண்ணைக்குள் நுழைய விடக்கூடாது. மாடுகள் நோயுற்றால் உடனே அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகித் தேவையான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். நோயுற்ற பசுக்களைப் பிரித்துத் தனியாக வைத்து பராமரிக்க வேண்டும்.

கட்டுரை : **முனைவர் இரா.உமாராணி, முனைவர் க.கனகராஜ துரை மற்றும் முனைவர் சௌ.சிவசீலன், கால்நடை பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை-5.**

# கடலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள்

கடலூர், ஆக.2

கடலூர் மாவட்டத்திற்கு இந்திய வானிலை துறையிடம் இருந்து பெறபட்ட வானிலை முன்னறிவிப்பில் 4.8.23 முதல் 6.8.23 தேதிகளில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

காற்றின் ஈரப்பதம் 50% ஆகவும், பகல் நேரங்களில் 40% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 38.0-39.0°C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27.0-28.0°C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 10-12 கி.மீ ஆக தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.

அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழைக்கே வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் பயிர்களுக்கு மண்ணின் ஈரத் தன்மையை பொறுத்து நீர்பாசனம் செய்யவும். முன்பருவ சம்பா பயிரிடும் விவசாயிகள் வயல்களை தயார் செய்யுமாறு அறிவுறுதப்படுகிறது.

கடலூர் மாவட்டத்திற்கு சம்பா பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 50, ஆடுதுறை 51, ஆடுதுறை 52, சிஆர் 1009, சிஆர் 1009 சப் 1 மற்றும் சொர்ணாசப் 1.

தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் புகையான் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப் பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர்பூச்சிகள் ஒட்டிக் கொண்டிருக்கும்.

தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து 'தீய்ந்த மாதிரி' காட்சியளிக்கும். மேலும் பயிர்கள் சாய்ந்து விடும். இதைக் கட்டுப்படுத்த அதிகளவில் தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். ஏக்கருக்கு பைமெட்ரோசின் 120 கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவம் (50 மிலி/ஏக்கர் மேக்னட்/டீபால்) கலந்து தெளிக்க வேண்டும்.

தற்பொழுது மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் படைப் புழுவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது, அதை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடலாம்.

வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடலாம். சியன்ட்ரானிலிப்ரோல் 19.8% + தயாமீதாக்ஷம் 19.8 FS @ 4.0 மிலி/கிலோ என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம்.

இஞ்சி அல்லது தட்டைப்பயிறு அல்லது உளுந்து பயிர்களை வரப்பு ஓரங்களில் நடவு செய்யலாம். எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்கலாம். குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC @ 0.4 மிலி/லி (அல்லது) ஃபுளுபெண்டிமைடு 20 WG (0.5 கிராம்/லி) என்ற அளவில் பயிர் செய்த 15-20 நாட்களில் தெளிக்க வேண்டும்.




எமாமெட்டின் பென்சோயேட் 5 SG (0.4 g/l) அல்லது ஸ்பைனிடோராம் 11.7 SC (0.5 மிலி/லி) 35-40 நாள் மற்றும் 60 நாள் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு கடலூர் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் க.நடராஜன், இணை பேராசிரியர் ஜெ.ஜெயக்குமார், உதவி பேராசிரியர் க.செங் குட்டுவன், தொழில் நுட்ப வல்லுநர் ச.அருள்மதி மற்றும் வானிலை கண்காணிப்பாளர் மு.பாவனி அறிவுறுத்துகின்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தினம் ஒரு மூலிகை

## கட்டு கொடி




கட்டு கொடி. முனை மங்கிய இலைகளுடன் வேலிகளில் படர்ந்து வளரக்கூடிய ஏறுக்கொடி இனம் சாற்றை நீரில் கலந்து வைக்க சிறிது நேரத்தில் கட்டியாகும் சிறு கட்டுக்கொடி பெரும் கட்டுக்கொடி என இரண்டு வகை உண்டு. இதன் மருத்துவ குணங்கள் இரண்டும் ஒன்று குளிர்ச்சி உண்டாக்குதல், உமிழ்நீர் பெருக்கியாகவும் செயல்படும். 10 கிராம் இலையை மென்று தின்ன ரத்த பேதி, சீதபேதி, மூலக்கடுப்பு, எரிச்சல் தீரும். இலை வேப்பம் கொழுந்து சம அளவு அரைத்து காலையில் மட்டும் கொடுத்து வர நீரழிவு களைப்பு, தேகறிவு அதி தாகம், பகுமூத்திரம் தீரும். சிறுநீர் சர்க்கரையும் தீரும். இலையுடன் மாம்பருப்பு சமன் அரைத்து பால் சர்க்கரை சேர்த்து காலை, மாலை கொடுக்க பேதி தீரும். சிறிதளவு வேருடன் ஒரு துண்டு சுக்கு நாலு மிளகுடன் காய்ச்சி கொடுக்க வாத வலி, வாத நோய், கீழ்நோய் நீங்கும். இளைச்சாற்றை சர்க்கரை கலந்து நீரில் கலக்க வைத்து சிறிது நேரத்தில் கட்டியாகும். இதை அதிகாலையில் சாப்பிட்டு வர வெள்ளை வெட்டை, சீத கழிச்சல், ரத்த கழிச்சல் ஆகியவை தீரும். வேறையும் கயச்சி பருப்பையும் இழைத்து விழுதாக்கி கலந்து அரை தேக்கரண்டி நீரில் கலந்து கொடுக்க குழந்தைகள் வயிற்று வலி நீங்கும்.

தகவல் : ASN சாமி, அங்கக ஒருங்கிணைந்த விவசாய பண்ணை மற்றும் மூலிகை பண்ணை, ஆதனூர். திருவண்ணாமலை மாவட்டம். 94423 11505.



# ஆடி மாதமும் வேளாண்மையும் - ஓர் பார்வை



ஆடி மாதமும் வேளாண்மையும் ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாது. ஆடி தமிழ் மாதத்தின் நான்காவது மாதமாக இருந்தாலும் கூட விவசாயத்தின் தொடக்க மாதமாக கருதப்படுகின்றன.

எத்தனை சாகுபடி பட்டங்கள் இருந்தாலும்கூட (மாசி பட்டம், ஐப்பசி பட்டம்) ஆடி பட்டம் தேடி விதை தான் சிறப்பாக விவசாயிகள் கருதுகின்றனர். ஆடி பிறந்தாலே விவசாயி களுக்கு உற்சாகம் தொடங்கும். ஆடியில் ஒவ்வொரு நாளும் ஒப்பற்ற நாளாக (ஆடி செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடி அமாவசை, ஆடி கார்த்திகை, ஆடிபெருக்கு) கிராமப்புறங்களில் கொண்டாடி வருவதுடன் முளைப்பாரி திருவிழாவும் நடை பெறும். விதைகள் எவ்வாறு முளைக்கின்றன என்பதை தெரிந்து கொள்ள ஆன்மிகம் கலந்த முளைப்பாரி திருவிழா நடத்தப்படுகிறது.

**வேறு எந்தெந்த வழிகளில் வேளாண்மையுடன் ஆடி மாதம் ஒத்து போகிறது?**

'ஆடிப் பிறையைத் தேடி பார்' என்றொரு பழமொழியும் உண்டு. பிறையின் வடகோடி உயர்ந்திருந்தால் அவ்வருடம் வெள்ளாமை உயர்ந்திருக்கும் என்பதும், தென் கோடி உயர்ந்திருந்தால், வெள்ளாமை தாழ்ந்திருக்கும் என்பதும் நாம் முன்னோர்களின் நம்பிக்கை. ஆடி பட்டம் தேடி விதைத்த காலங்கள் நிறைய உண்டு. இன்று பருவநிலை மாற்றம் எல்னோ எபக்ட் காரணமாக மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் விவசாயிகள்.

**ஆடி காற்று ஏன். அதனால் என்ன பயன்?**

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களான 9 மாவட்டங்களில் ஆடியில் சுழன்று சுழன்று காற்றடித்தால், குடகு மலைசாரலில் தென்மேற்கு பருவமழை துவங்கி ஆற்றில் நீர் நிரம்பிய வழியும்.

அந்த அளவுக்கு மழையை கொண்டு வருமளவுக்கு காற்றடிக்கும். ஆடி காற்றிலே அம்மியும் பறக்கும்‘ என்பது பழமொழி. ஆடியிலே காத்தடிச்சா, ஐப்பசியிலே மழை வரும்‘ என்ற திரைப்பட பாடலும் உண்டு. ஆடியில் காவிரியில் கரை புரண்டு வெள்ளம் ஓடும், எனவே ஆடிப்பட்டம் தேடி விதைத்து தை மாதத்தில் அறுவடை செய்யலாம். அதனால் என்னவோ ‘தை பிறந்தால் வழி பிறக்கும்‘ என்று சொல்லிவிட்டு போயிருக்கிறார்கள் நம்முடைய முன்னோர்கள்.

ஆடியில் கொண்டாடும் ஒவ்வொரு பண்டிகையும், வேளாண்மையுடன் கலந்து தான் கொண்டாடப்பட்டு






வருகின்றன. எடுத்துக்காட்டாக ஆடி பெருக்கு அன்று பலவித மான அரிசி வகைகளை நிவேதனமாக படைப்பார்கள்.

இதற்காகவே டெல்டா விவசாயிகள், பல விதமான நெல் வகைகளை (மாப்பிள்ளை சம்பா, சண்டிகார், சிறு மணியன்) சிறிய அளவில் பயிரிட்டு, அறுவடை செய்து, அதன் அரிசியை கொண்டு நிவேதனமாக செய்து ஆடிப் பெருக்கில் காவிரித் தாயை வரவேற்பார்கள்.

ஆடிப் பெருக்கை ‘அரிசிகளின் திருவிழா‘ என்றும் அழைக்க லாம். அழிந்த போயிருக்கும் இம்மாதிரியான பழக்கங்களை மீளுருவாக்கம் செய்ய வேண்டும்.

**ஆடிப்பட்ட திரைப்பட பாடல்கள் எவை என்று தெரியுமா?**

'ஆடிப்பட்டம் தேடி செந்நெல் விதை போட்டு' என்றும், 'ஆடிப்பட்டம் தேடி பார்த்து விதைக்கனும் கண்ணையா' என்றும் பாடல்கள் உள்ளன.

பசுமைக்குடில் பற்றி தெரியாத அந்த காலத்துல ஆடியில் விதை விதைக்க வேண்டும் என்ற அனுபவத்தை நம்முடைய முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது நமக்கு இடம் பொருள் காலமறிந்து செயல்பட்டாலே வெற்றியை தரும் என்பதை உணர்த்துகிறது.

**ஆடியில் என்ன விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.**

ஆடி பெருக்கயன்று மரக்கன்றுகள் நடுதல் மழை பெய்தால் மானாவாரி விதைப்பு (நிலக்கடலை, எள், பயறு வகைகள் நாற்றாங்கால்) போன்றவை அமைக்கப்படும். மேலும் வீட்டுத் தோட்டம் (பயிர் குழிகள்) அமைத்து காய்கறி விதைக்கப் படலாம்.

எனவே ஆடியும் விவசாயமும் ஓன்றுடன் ஓன்று தொடர்பு உடையது. ஆடி மாதம் என்றால் விவசாயிகள் உழவு நிலத்தில் விவசாயம் செய்ய ஆர்பாரிப்பார்கள்.

நீரும் மண்ணும் பயிரும் தான் நம் மக்களை (விவசாயி களை) இயக்கவும், இயங்கவும் வைக்கும். இந்த மாதம் வணிகர்களுக்கு ஆடி தள்ளுபடி விவசாயிகளுக்கு ஆடி சாகுபடியின் தொடக்கம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# பங்கேற்பாளர் உறுதியளிப்பு திட்டத்தில் உறுப்பினராக இயற்கை விவசாய குழுக்களுக்கு வேளாண்துறை அழைப்பு

விழுப்புரம், ஆக.2

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் கட்டணமில்லாமல் அங்ககச்சான்று பெறலாம் என மாவட்ட விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் முனைவர் க.பாலசுப்ர மணியன் தெரிவித்துள்ளார்,

பங்கேற்பாளர் உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் அங்ககச்சான்று பெறுவதற்கு 2 முதல் 3 கிராமங்களில் உள்ள சிறு குறு விவசாயிகள் 5 முதல் 100 நபர்கள் வரை ஒரு குழுவாக அமைத்து அனைவரும் சேர்ந்து அங்கக முறையில் பயிர் சாகுபடி செய்வோம் என உறுதிமொழி ஏற்று அதற்கான ஒப்புதல் பெறப்பட்டு உறுதிமொழி படிவம் பண்ணையின் பொது விபரங்கள் ஆதார் நகல், போட்டா மற்றும் சிட்டா ஆகியவற்றை மண்டல குழுவிற்கு சமர்பிக்க வேண்டும் ஆவணங்கள் சரி பார்க்கபட்டு குழுவிற்கு அங்கீகாரம் வழங்கப்படும்.



இத்திட்டத்தில் குழுவில் உள்ள உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்களின் வயலை ஆய்வு செய்ய வேண்டும். ஆய்வு முடிகள் குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டு ஆய்வறிக்கைகள் சரிபார்க்கப்பட்டு அங்ககச்சான்றிதழ் வழங்கப்படும்,

இத்திட்டத்தில் விவசாயிகள் தனிப்பட்ட முறையில் சான்று பெற இயலாது, குழுவாக மட்டுமே பதிவு செய்ய இயலும், அவ்வாறு பதிவு செய்யப்பட்ட குழுக்களின் விவரங்கள் அவ்வப்போது இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும் கட்டணமின்றி




விவசாயிகள் எளிமையான முறையில் பதிவு செய்வதால் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்

இக்குழுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட விளை பொருட்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு அவற்றில் எஞ்சிய பூச்சிக்கொல்லி மருந்துகளின் எச்சம் உள்ளதாக என பரிசோதனை செய்து பூச்சிகொல்லி மருந்துகளின் எச்சம் இல்லை என சான்று பெற்ற பின்னர் விளை பொருட்களை விற்பனை செய்து நல்ல லாபம் பெறலாம்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் அல்லது ஏற்கனவே அங்கக முறையில் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் குழுவாக இணைந்து இத்திட்டத்தில் சேர விழுப்புரம் விதைச் சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் அலுவல கத்திற்கு தொடர்பு கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொண்டார்.

# ஆவணி பேரூர் கீழ் முகம் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழுக்கூட்டம்

சேலம், ஆக.2

கிராம வேளாண் முன்னேற்ற குழுவுக்கு வேளாண் திட்டங்கள் குறித்த பயிற்சி கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராமமான ஆவணி பேரூர் கீழ் முகம் கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குனர் மணிவாசகம், தோட்டக்கலை உதவி இயக்குனர் ராதா சுந்தர்ராஜன், வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் செல்வம் கால்நடை மருத்துவர் மற்றும் எடப்பாடி வட்டாரத்தை சேர்ந்த வேளாண்மை அலுவலர் துணை வேளாண்மை அலுவலர்கள் உதவி வேளாண்மை மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர்கள் ஆத்மா குழு தொழில் நுட்ப மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பருவம் சார்ந்த தொழில்நுட்ப பயிற்சியை குழு விவசாயிகளுக்கு அளித்தனர்.

மேலும் வேளாண் துறை சார்ந்த திட்டங்களையும் இடுபொருட் களையும் பெற்றிட உழவன் செயலில் முன்பதிவு செய்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குநர் கலைஞரின் ஒருங்கிணைந்த கிராம வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமத்திற்கு தேவையான வேளாண் உட்கட்டமைப்புகளான கதிரடிக்கும் களம், தானிய சேமிப்பு கிடங்கு, விவசாய நிலங்களுக்கு மண் சாலை அமைத்தல் உள்ளிட்ட பணிகளை ஊரக வளர்ச்சித்துறை மூலம் மேற்கொண்டிட உரிய தேவை விபரங்களை அளித்திட கேட்டுக்கொண்டார்.

வேளாண் பொறியியல் துறையில் மானியத்தில் வழங்கப்படும் பவர் டில்லர் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்கள் பெறுவது குறித்து விளக்கப்பட்டது.

கால்நடை பராமரிப்புதுறையில் மாடுகளுக்கு மடிக்காம்பு நோய் வராமலும், பசுந்தீவன குறைபாட்டால் கால்நடைகளுக்கு ஏற்படும் சத்து குறைபாட்டினை போக்குவது குறித்தும் விளக்கப் பட்டது. எடப்பாடி உதவி வேளாண்மை அலுவலர் கலைமணி நன்றி தெரிவித்து கூட்டத்தினை முடித்து வைத்தார்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி




விருதுநகர், ஆக.2

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையில் ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் சம்பந்தமாக பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி தலைமை யேற்று பயிற்சியை தொடங்கி வைத்தார். பயிற்சியில் சக்தி சுகர்ஸ் நிறுவன துணை மேலாளர் கரும்பு பாலசுப்பிரமணியன் நீடித்து நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்பத்தை பற்றியும், ராஜேஸ்வரி சுகர்ஸ் மூத்த கரும்பு அலுவலர் மாடசாமி, கரும்பு சாகுபடி போது பின்பற்ற வேண்டிய இதர தொழில் குறித்தும் மூத்த விவசாயி ராமலிங்கம், கரும்பில் நீடித்த நிலையான சாகுபடி குறித்து தனது அனுபவங்களை விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டார். பயிற்சியில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடியில் ஒரு பரு சிவில் கருணை 5000 ஒரு ஏக்கருக்கு இருந்தால் போதும் என்றும், இது எடையில் வெறும் அரை டன் அளவே கரும்பு தேவைப்படுவது எனவும் சாதாரண முறையில் இருபரு கருணை ஏக்கருக்கு 30,000 சுமார் ஐந்து டன் அளவு விதை கரும்பு தேவைப்படுவதால் நாம் விதை கரும்பு மூலமாக விவசாயிகள் செலவை குறைத்துக் கொள்ளலாம்.



மேலும் இத்திட்டத்தில் கரும்பு குழித்தட்டு நாற்றங்களில் 20 முதல் 30 நாள் நாற்றங்கால் பயிர் வளர்த்து பின்பு நடவு செய்யப்படுவதால் பராமரிப்பு செலவும், தண்ணீர் செலவும், ஆட்கூலியும் குறைகிறது. மேலும் இதில் சொட்டு நீர் பாசனம் அமைத்து சாகுபடி செய்வதால் விவசாயிகள் தேவையான உர அளவை பயிருக்கு நேரடியாக வேருக்கு வழங்கவும், களைகள் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. மேலும் கரும்பு 5மு2 அடியும் இடைவெளியில் பராமரிக்கப்படுவதால், பக்க சிம்புகள் அதிகம் விட்டு, கரும்பு அதிக எடையுடன் இருப்பதால் மகசூலும் அதிகரிக் கிறது. மேலும் இடைவெளி அதிக இருக்கும் காரணத்தினால் விவசாயிகள் ஊடுபயிராக உளுந்து பாசி போன்றவற்றையும் சாகுபடி செய்ய முடியும். எனவே சாதாரண கரும்பு முறை ஒப்பிடும் பொழுது நீடித்து நிலையான கரும்பு சாகுபடி ஆனது செலவு குறைந்து அதிகமாக மகசூலும் இலாபமும் தருகிறது என விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டது. மேலும் இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் குரு லட்சுமி, துணை வேளாண்மை அலுவலர் அம்மையப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சிக்கான ஏற்பாட்டை ஆத்மா தொழில்நுட்ப அலுவலர்கள் ஜோதி மஞ்சுளா மற்றும் மாரிமுத்து ஏற்பாடு செய்தனர்.



# சேலம் மாவட்டம், தம்மம்பட்டி, உழவர் சந்தை
# 2-8-23 காய்கறிகள் விலை விபரம்

(ரூ/கிலோ)

| | |
|---|---|
| 1. தக்காளி | ரூ.80-110-120 |
| 2. உருளை | ரூ.30-32 |
| 3. சின்ன வெங்காயம் | ரூ.55-58 |
| 4. பெரிய வெங்காயம் | ரூ.25-28 |
| 5. பச்சை மிளகாய் | ரூ.58-60 |
| 6. கத்தரி | ரூ.38-40 |
| 7. வெண்டைக்காய் | ரூ.28-30 |
| 8. முருங்கை காய் | ரூ.30-40 |
| 9. பீர்க்கங்காய் | ரூ.38-40 |
| 10. சுரக்காய் | ரூ.18-20 |
| 11. புடலங்காய் | ரூ.20-24 |




| | |
|---|---|
| 12. பாகற்காய் | ரூ.55-58 |
| 13. தேங்காய் | ரூ.20-25 |
| 14. முள்ளங்கி | ரூ.12-14 |
| 15. பீன்ஸ் | ரூ.95-100 |
| 16. அவரை | ரூ.55-60 |
| 17. ஊட்டி கேரட் | ரூ.60-65 |
| 18. வெற்றிலை | இல்லை |
| 19. மாங்காய் | ரூ.25-30 |
| 20. வாழைப்பழம் | ரூ. 30-40 |
| 21. கீரைகள் | ரூ.20- 24 |
| 22. பப்பாளி | ரூ.18 -20 |
| 23. கொய்யா | ரூ.30-40 |
| 24. மாம்பழம் | ரூ.40-50 |
| 25. ஆப்பிள் | இல்லை |
| 26. சாத்துக்குடி | இல்லை |

தகவல் : நிர்வாக அலுவலர், உழவர் சந்தை, தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்.


MICRONOL®
ISO 9001 : 2015
வாழையில்
வளமான
மகசூலுக்கு
MICRONOL
MULTI MICRONUTRIENT FERTILIZERS B-10
BANANA
TURMERIC
GINGER
For Agriculture Use only
SOIL APPLICATION
MICRONOL
AGRIYA Plus
SOIL CONDITIONER FOR ALL CROPS
Ca + Mg + S
MICRONOL
MICRONOL
VC
மைக்ரோனால் LCM B-10
(மண்ணில் இடும் உரம்)
அக்ரியா ப்ளஸ்
(மண்ணில் இடும் உரம்)
மைக்ரோனால் VC
(இலைவழித் தெளிப்பு)
LINGA CHEMICALS
Customer Care:
0452 - 2321722

# வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகள் விஞ்ஞானிகள் கூட்டாய்வு



ஈரோடு, ஆக.2

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம், வேளாண்மை – உழவர் நலத்துறை, கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகள் விஞ்ஞானிகள் கூட்டாய்வு 1.8.23 அன்று கனகபுரம் கிராமத்தில் நடைபெற்றது. இப்பகுதியில் தென்னையில் கருந்தலைப்புழுவின் தாக்குதல் மிக அதிக அளவில் காணப்பட்டது. இது குறித்து டாக்டர் கணேசன், பேராசிரியர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர், தோப்புகளைப் பார்வையிட்டு ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக பரிந்துரைகள் வழங்கினார்.

புழு தாக்குதலின் அறிகுறிகள் குறித்து அவர் கூறியதாவது, புழுக்கள் ஓலையின் அடிப்பகுதியில் உள்ள பச்சையத்தை உறிஞ்சுவதால் மட்டைகள் காய்ந்து காணப்படும். அதிகமாகத் தாக்கப்பட்ட மரங்கள் எரிந்து தீய்ந்து போனது போல் தென்படும். மேலும் இப்புழுக்கள் அனைத்து வயதிலுள்ள மரங்களையும் தாக்கும் என விளக்கம் அளித்தார்.

கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து அவர் கூறியதாவது, காய்ந்த ஓலைகள் அனைத்தையும் வெட்டி அப்புறப்படுத்தி எரித்து விட வேண்டும். பிரக்கானிட் ஒட்டுண்ணிகள் 1 ஏக்கருக்கு 21 அட்டைகள் கட்ட வேண்டும். இரசாயன முறையில் டைக்குளோர்வாஸ் (100 நுஊ) 0.02% மருந்தை தெளிக்கவும் அறிவுறுத்தினார். மற்றும் வேர் மூலமாக மருந்து கட்டுதல் குறித்து செயல்முறைவிளக்கம் அளித்தார். விளக்குப்பொறிகளை பயன்படுத்தி அந்துப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் என அறிவுறுத்தினார். மேலும் சிவப்பு கூன் வண்டு, ரூகோஸ் வெள்ளை ஈ தாக்குதல் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சா.கலைச்செல்வி, வேளாண்மை உதவி இயக்குநர், ளு.செல்வராஜ், துணை வேளாண்மை அலுவலர், வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரதீப்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் த.விஜயகுமார், பொ.லட்சுமி, உதவி வேளாண்மை அலுவலர் நவீனபாரதி மற்றும் த.ரேவதி ஆகியோர் உடன் இருந்தனர்.

# திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் 30வது நிறுவன நாள் விழா

திருச்சி, ஆக.2

திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் 30வது நிறுவன நாள் விழா வரும் 21.8.23 (திங்கட்கிழமை) நடைபெறுகிறது. விழாவின் மையக்கருத்தாக 'வாழை உற்பத்தியில் செயற்கை நுண்ணறிவு மற்றும் சந்தைப்படுத்துதல்' வாழைச் சாகுபடியில் செயற்கை நுண்ணறிவு, உணர்முனைய (sensor) அடிப்படையில் வாழைச் சாகுபடி, வலவனில்லா ஊர்தி (drone) பயன்பாடு, மின்னணு சந்தை முறை, தொழில்நுட்ப அமர்வு, கருத்துக்காட்சி, நேரடி செய்முறை விளக்கம், பண்ணை உலா நிகழ்ச்சிகள் நடை பெறும். பதிவுக் கட்டணம் இல்லை.

குழுவாக (10க்கும் மேற்பட்ட உழவர்கள்) வருவதாக இருந்தால், முன்பதிவு செய்து கொள்ளலாம்.

தங்களை தேசிய வாழை ஆராய்ச்சி மையம் சார்பாக என வரவேற்கிறோம்.



# தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் விஞ்ஞானிகள் கூட்டாய்வு



ஈரோடு, ஆக.2

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டார வேளாண்மை உழவர் நலத்துறை வேளாண்மை தொழில் நுட்ப மேலான்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் விவசாயிகள் விஞ்ஞானிகள் கூட்டாய்வு 31.7.223 அன்று நடைபெற்றது.

இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, சத்தியமங்கலம் வட்டாரத்தில் உக்கரம் வருவாய் கிராமத்தை சேர்ந்த மில்மேடு, மேட்டுக்கடை ஆகிய பகுதிகளில் தென்னையில் கருந்தலைப் புழு தாக்குதல் தென்படுவதை அடுத்து அந்த பகுதியில் பவானிசாகர் வேளாண் ஆராய்சி நிலையத்தை சேர்ந்த விஞ்ஞானி முனைவர் கணேசன் பூச்சியியல் துறை மற்றும் விஞ்ஞானி முனைவர் வாகேஸ்வரன் ஆகியோர் உடன் பாதிக்கப்பட் பகுயில் ஆய்வு மேற்கொண்டு அதற்கான காரணங்களை கண்டறிந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளனர். அந்த பகுதியில் தென்னை மரங்களில் கருந்தலைப் புழுவின் தாக்குதல் அதிக அளவில் உள்ளது என விஞ்ஞானி முனைவர் கணேசன் பூச்சியியல் துறை மற்றும் விஞ்ஞானி முனைவர் வாகேஸ்வரன் ஆகியோர் கண்டறிந்தனர். அதற்காண கட்டுப்பாட்டு முறைகளை பின்வருமாறு விவசாயிகளுக்கு தெரிவித்தனர்,

## கருந்தலைப் புழு

- இப்புழுக்கள் பிப்ரவரி மாதத்திலிருந்து ஜீன் மாதம் வரை தாக்குதல் அதிக அளவில் இருக்கும். பெண் அந்துப்பூச்சிகள் இலையணுக்குகளின் அடிப்பாகத்தில் முட்டைகளை இடுகின்றன.
- கருந்தலைபுழுக்கள் தென்னை ஓலையின் உள்பாகத்தில் இருந்து கொண்டு ஓலையின் பச்சையத்தை சுரண்டித் தின்னும். இதனால் ஓலை காய்ந்து விட்டு எரிந்தாற் போல் காணப்படும்.

## மேலாண்மை

- கருந்தலைப் புழுக்களால் தாக்கப்பட்டதென்னை மட்டைகளை வெட்டி எரித்துவிடவும்.



● கருந்தலைப் புழுவை கட்டுப்படுத்தும் பிரக்கானிட் புழு ஒட்டுண்ணிகளை ஒரு மரத்திற்கு 20 என்ற விகிதத்தில் விடவும். இந்த ஒட்டுண்ணிகளை மரத்தின் குருத்துப் பாகத்தில் ஓலைகளுக்கு அருகில் விடவும். பூச்சி மருந்து தெளித்த உடனேயே தோப்புகளில் ஒட்டுண்ணிகளை விடக் கூடாது. தோப்புகளில் ஒட்டுண்ணிகள் காலை 8 மணிக்கு முன்பாகவோ அல்லது மாலை 4 மணிக்கு பிறகோ மழை பெய்யாத அதிகமாக காற்றுவீசாத நேரத்தில் விடவேண்டும்.

கருந்தலைப் புழுவின் தாக்குதல் அதிகமாக தென்படும்போது திசுக்களினுள் ஊடுருவி பூச்சிகளை கொல்லும் திறன் படைத்த பூச்சி கொல்லி மருந்தான மோனோகுரோட்டோபாஸ் 10 மிலியை 10 லி தண்ணீரில் கலந்து வேர் மூலமாக 4 மாத இடைவெளியல் உட்செலுத்துவதன் மூலமாக இப்பூச்சியின் தாக்குதலை குறைக்க முடியும் பென்சில் தடி மனுள்ள முற்றிய வேரையே மருந்துகட்ட தேர்ந்தெடுக்கவேண்டும்.

மருந்து கட்டிய 24 மணி நேரத்துக்குள் மருந்து முழுவதுமாக உறிஞ்சப்பட்டிருக்க வேண்டும். மருந்து கட்டப்பட்ட மரத்திற்கு ஒரு வாரத்திற்கு நீர் பாச்சக்கூடாது. வேர் மூலம் மருந்து செலுத்தும் முன்பு முற்றிய காய்களை பறித்து விடவும். மருந்து செலுத்திய பின்பு 45 நாட்கள் கழித்து தான் மறுபடியும் தேங்காய் அல்லது இளநீர் அறுவடை செய்ய வேண்டும்.

மேலும் விவசாயிகள் தென்னைக்கு வேர் மூலமாக மருந்து கட்டுவது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் வேலுசாமி கூறுகையில் தற்போது மேல் நோக்கி இருப்பது போல் கட்டியுள்ளனர். இது தவறான முறை ஆகும் மருந்து கலவை பை கீழ் இருப்பது போலவும் வேர் அதனுல் கீழ் நோக்கி உள்ளது போலவும் படத்தில் உள்ளவாறு மருந்து வடிந்து வீணாகாத வாறு கட்ட வேண்டும்.

நமது பகுதியில் தென்னைக்கு வேர் மூலமாக மருந்து செலுத்துவதில் சற்று கவனமாக வேர் பகுதியிலிருந்து 45 டிகிரி கீழாக ஒழுகாத பைகளில் மருந்து கட்ட வேண்டும் எனக் கூறினார்கள்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தரமான நெல் விதை உற்பத்தி முறைகள்

**திருந்திய நெல் சாகுபடி** : விதையளவு : அனைத்து இரகங்கள் மற்றும் அனைத்து வயதுடைய பயிர் 2 கிலோ/ ஏக்கர்.

**தரமான நெல் விதைக்குரிய காரணிகள் :** நெல் விதைகள் நன்கு திரட்சியாகவும், பதர் மற்றும் நோய்க் கிருமிகள் இல்லாமல் இருக்க வேண்டும். நெல் விதைகள் கலப்பிடம் இல்லாமல் இருக்க வேண்டும். விதையின் முளைப்புத்திறன் 98 சதவீதத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

**தரமான நெல் விதையை தேர்ந்தெடுக்கும் நுட்பம்**

நெல் விதைகளை பொதுவாக நீரில் போட்டு கையால் கலக்கினால் உயிரற்ற விதைகள் நீரில் மிதக்கும். இந்த முறைப்படி 25-50 சதவீதம் தான் தரமான விதைகளை பிரித்தெடுக்க முடியும். மிக சுலபமான தொழில் நுட்பம் உப்புக்கரைசலை பயன்படுத்தி தரமான விதைகளை பிரித்தெடுப்பது.

**விதை நேர்த்தி முறைகள்**

**பூஞ்சான விதை நேர்த்தி :** ஒரு கிலோ நெல் விதைக்கு கார்பண்டிசம் (அ) பைரேகுளான் டைரக்கோசொல் 2 கிராம் வீதம் 1 லிட்டர் நீரில் கரைத்து நெல் விதைகளுடன் கலந்து நிழலில் உலர்த்தி பின்பு நாற்றங்காலில் விதைக்கவும். சூடோமோனாஸ் புளுரோசன்ஸ் 10கிராம் உயிர் பூஞ்ஞான கொல்லி மருந்தை 1 லிட்டர் நீரில் கரைத்து நெல் விதையுடன் கலந்து சாக்கு பையில் போட்டு 24 மணி நேரம் கட்டிவைத்து பின்பு விதைக்கவும்.

அசோஸ்பைரில்லம் 600கி (அ) பாஸ்போபாக்டீரியா 600கி (அ) அசோபாஸ் 1200 கிராம் உயிர் உரத்தை ஆற வைத்த அரிசி கஞ்சியுடன் சேர்த்து இந்த கலவையை விதை நெல்லுடன் கலந்து ஒரு நாள் முழுவதும் இருட்டு அறையில் வைத்து பின்பு விதைக்கவும்.

**குறிப்பு :** உயிர் உரங்களை இரசாயண மருந்துகளுடன் கலந்து விதை நேர்த்தி செய்யகூடாது.

**உயிர் உரங்களை கொண்டு விதை நேர்த்தி :** ஒரு ஏக்கருக்கு தேவையான நெல் விதையைப் (1-2) பாக்கெட் அசோஸ்பைரில் லத்துடன்/பாஸ்போ பாக்டீரியா/அசோபாஸ் ஆற வைத்த அரிசி கஞ்சியுடன் கலந்து ஒரு நாள் இரவு முழுவதும் வைத்திருந்து பின்பு மறுநாள் நாற்றங்காலில் விதைக்கவும்.

தகவல் : **விதைச்சான்று (ம) அங்ககச்சான்று உதவி இயக்குநர், கடலூர்.**

# பயிர் அறுவடை பரிசோதனைக்கான புத்தாக்க பயிற்சி



தஞ்சாவூர், ஆக.2

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக் கோட்டை, மதுக்கூர், பேரா வூரணி மற்றும் சேதுபாவா சத்திரத்தை சேர்ந்த வேளாண் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை கள அலுவலர்களுக்கு பயிர் அறுவடை பரிசோதனை குறித்த புத்தாக்க பயிற்சி பட்டுக்கோட்டை கோட்டாட்சியர் அலுவல கத்தில் புள்ளியல் துறை பட்டுக்கோட்டை கோட்ட புள்ளியியல் உதவி இயக்குனர் அபிராமன் தலைமையில நடைபெற்றது. புள்ளியல் துறை சேர்ந்த மதுக்கூர் புள்ளியியல் ஆய்வாளர் கார்த்தி, பட்டுக்கோட்டை வட்டார புள்ளியல் ஆய்வாளர் சுபலட்சுமி சேது பாவ சத்திரம் புள்ளியியல் ஆய்வாளர் சியாமளாதேவி மற்றும் பட்டுக்கோட்டை புள்ளியியல் ஆய்வு அலுவலர் சித்ரா ஆகியோர் கலந்துகொண்டு வட்டார அளவில் பயிர் மதிப்பீட்டு வாழ்வில் கல அளவில் ஏற்படும் சந்தேகங்கள் குறித்து வேளாண் உதவி அலுவலர்களுடன் கலந்துரை யாடினர். வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் தோட்டக் கலைத்துறை சேர்ந்த அனைத்து கள அலுவலர்களுக்கும் உணவு தானிய உற்பத்தி திறனை நிர்ணயிக்கும் பொருட்டு, மேற்கொள்ள வேண்டிய பணிகள், பயிர் காப்பீடு திட்டத்தில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் கலப்பு பயிர் மற்றும் தனி பயிர்களுக்கான பயிர் அறுவடை மகசூல் கணக்கிடும் முறைகள் மற்றும் பயிர் அறுவடை பரிசோதனை தளைகளை தேர்வு செய்யும் முறைகள் குறித்து புள்ளியியல் உதவி இயக்குனர் அபிராமன் விளக்கிப் பேசினார்.

மதுக்கூர் வேளாண் உதவி இயக்குனர் பயிற்சி அளித்த அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை பட்டுக்கோட்டை மதுக்கூர் மற்றும் பேராவூரணி சேதுபாவசத்திரத்தை சேர்ந்த புள்ளியியல் ஆய்வாளர்கள் செய்திருந்தனர். பயிற்சியில் சேதுபாவா சத்திரம் வேளாண் உதவி இயக்குனர் சாந்தி, துணை வேளாண்மை அலுவலர் மற்றும் பட்டுக்கோட்டை அப்சரா உள்ளிட்ட வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர். பயிர் அறுவடை பரிசோதனை பணியாளர்களும் அனைத்து வட்டாரங்களில் இருந்து கலந்து கொண்டனர்.

# கடலூர் மாவட்டத்திற்கு ஏற்ற சம்பா பருவ நெல் இரகங்கள்

கடலூர், ஆக.2

கடலூர் மாவட்டத்தில் தற்பொழுது முன்பருவ சம்பா விதைப்பு செய்யும் விவசாயிகள் பருவத்திற்து ஏற்ற ஆடுதுறை 50, ஆடு துறை 51, ஆடுதுறை 52, சிஆர் 1009, சிஆர் 1009 சப் 1 மற்றும் சொர்ணாசப் 1 இரகங்களை பயிரிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**இரகங்களின் சிறப்பியல்புகள்**

**ஆடுதுறை 50 :** மத்திய சன்ன அரிசி. வளர்ச்சி பருவம் 150 நாட்கள். குலைநோய், இலைப்புள்ளி, இலைச்சுருட்டுப் புழு மற்றும் குருத்துப் பூச்சிக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.

**ஆடுதுறை 51 :** மத்திய சன்ன அரிசி. வளர்ச்சி பருவம் 158 நாட்கள். குலைநோய், இலைச்சுருட்டுப் புழு மற்றும் குருத்துப் பூச்சிக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. புகையான், இலையுறை அழுகல் நோய் மற்றும் இலையுறை கருகலுக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது. எக்டர்க்கு 6.5 டன் மகசூல் தரக்கூடியது.

**ஆடுதுறை 52 :** மத்திய சன்ன வெள்ளை அரிசி. வளர்ச்சி பருவம் 145-150 நாட்கள். இலைச்சுருட்டுப் புழு, குருத்துப் பூச்சி, குலை நோய், குருத்து அழுகல் நோய், நெல் நிறமாற்றம் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. எக்டர்க்கு 4.9 டன் மகசூல் தரக்கூடியது.

**சிஆர் 1009 :** குட்டை பருமன் வகை. வளர்ச்சி பருவம் 155-160 நாட்கள். புகையானுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. எக்டர்க்கு 5.3 டன் மகசூல் தரக்கூடியது.

**சிஆர் 1009 சப் 1 :** குட்டை பருமன் வகை. வளர்ச்சி பருவம் 155-155 நாட்கள். வெள்ளத்தை தாங்கி வளரும் தன்மை கொண்டது. இலைப்புள்ளி நோய், குலைநோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. எக்டர்க்கு 6.5 டன் மகசூல் தரக்கூடியது.

**சொர்ணா சப் 1 :** நடுத்தர சன்ன அரிசி. வளர்ச்சி பருவம் 145 நாட்கள். 14-17 நாட்கள் 25 செ.மீட்டர் உயரத்திற்கு நீர் தேங்கி நின்றாலும் தாங்கும் திறன் கொண்டது. எக்டர்க்கு 4.5-5.5 டன் மகசூல் தரக்கூடியது.

இவ்வாறு கடலூர், வேளாண் அறிவியல் நிலையம், வானிலை தொழில்நுட்ப வல்லுநர் ச.அருள்மதி மற்றும் க.நடராஜன், திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தனர்.